# சபரகமுவ மாகாணக் கல்வித்திணைக்களம்
## விடுமுறைக்கால செயலட்டை
## சைவ நெறி – தரம் : 09
## நிவிதிகலை கல்வி வலயம்

## தலயாத்திரை

ஆறாம் வாரம்



**அறிவுறுத்தல்கள் :**

1. **சைவ நெறி பாடநூலின் பக்கம் 63 - 67 வரையுள்ள பாடப்பரப்பினை இரண்டு தடவைகள் நன்கு வாசிக்குக.**
2. **அப்பாடப்பரப்பின் முதலாவது பந்தியினை உறுப்பமைய பார்த்தெழுதுக.**
3. **பக்கம் 67 இல் வழங்கப்பட்ட பயிற்சியினை பயிற்சிக் கொப்பியில் எழுதி, விடையினை எழுதுக.**

4. கீழே தரப்பட்ட உமது பாடநூலிலுள்ள கந்தரலங்கார பாடலுக்கான பொருளினை எழுதி, மனனம் செய்க. ("விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்") – பக்கம் : 66

நமது கண்களுக்கு துணையாவது திருமுருகப்பெருமானது புனிதமானவையும் மென்மையானவையுமான செந்தாமரை மலர் போன்ற திரவடிகளேயாகும். உண்மையில் சிறிதும் குறையாத சொல்லுக்குத் துணையாவது "முருகா" என்று கூறும் அப்பரமபதியின் திருநாமங்களேயாகும். முன்பு செய்த பழியை அகற்றுவதற்கு துணையாவது திருமுருகப்பெருமானது பன்னிரண்டு புயங்களேயாகும். அஞ்சும் தன்மையுடைய தனிமையான வழிக்கு துணையாவது திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமாமானுடைய கூர்மையான வேலாயுதமும் மயிலுமாகும்.

5. தலயாத்திரையின் நன்மைகளை பட்டியற்படுத்தக.

6. நீங்கள் சென்று வந்த ஈழத்து சைவ தலங்கள் பற்றி நீர் அறிந்த தகவல்களைத் தொகுத்து எழுதுக.

7. தலயாத்திரை எனும் தலைப்பில் சிறு கட்டுரையாக்கமொன்றினை எழதுக.

<u>**குறு வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**</u>

1. திருநாவுக்கரசர் எக்காட்சியைக் காண தன் உடலை வருத்தி பயணித்தார்?
2. சபரி மலையிலுள்ள இறைவன் யார்?
3. சபரி மலை இறைவனுக்குரிய விரத நாட்கள் எத்தனை?
4. கதிர்காமத்தலம் அமையப்பெற்ற மாகாணம் மற்றும் மாவட்டத்தைக் குறிப்பிடுக?
5. கதிர்காமத் தலத்தின் வருடாந்த மகோற்சவம் இடம்பெறும் மாதம் மற்றும் இடம்பெறும் நாட்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.
6. முருகக் கடவுள் வதம் செய்த அசுரன் யார்?
7. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி" எனும் அடி இடம்பெறும் நூல் எது?
8. யாத்திரிகளின் தோற்றப் பொழிவை எழுதுக.
9. கதிர்காமக்கந்தனுக்குரிய கோஷம் எது?
10. தலயாத்திரை எமக்குத் தரும் மிகப் பெரிய பலன் எது?